1990 மார்ச் 20]

கோவில்பட்டி பத்திரப்பதிவு சார்பதிவாளர் அலுவலகம்.

*6839 திரு. சோ. அழகர்சாமி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவில்பட்டி பத்திரப்பதிவு சார் பதிவாளர் அலுவலகத்துடன் சேர்ந்திருந்த 8 கிராமங்கள் 1-9-1989-ல் புதிதாக துவக்கப்பட்டுள்ள கலிங்கப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அக்கிராம மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைப் போக்க மீண்டும் மேற்படி 8 கிராமங்களை கோவில்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1-9-1989 முதல் கலிங்கப்பட்டி சார் பதிவகத்துடன் இணைத்து, 30-10-1989 முதல் மீண்டும் வடக்குப்பட்டி சிற்றூர் தவிர்த்து மற்ற 7 சிற்றூர்கள் கோவில்பட்டி சார் பதிவகத்துடன் இணைக்கப்பட்டன.

திரு.அழகர்சாமி அவர்கள் இப்போது இருக்கையில் இல்லை. இந்த கேள்விக்கு ஏற்கெனவே பதில் சொல்லியாயிற்று, அவரும் திருப்தி அடைந்தாயிற்று. எனவே நான் கருதுகிறேன். இது பழைய கேள்வி, இப்போது புது உருவில் வந்திருக்கிறது.

பிராட்கேஜ் ரயில்பாதை.

*3321 திரு. ஆச்சியூர் எம். மணி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடியிலிருந்து நாங்குநேரிவரை பிராட்கேஜ் ரயில் பாதை அமைத்து நெல்லை—குமரி ரயில் பாதையுடன் இணைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மடிப்பாக்கம்—தலைமைச் செயலகம் பேருந்து.

*6522 திரு. ப. காளியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து கடற்கரை சாலை வழியாக தலைமைச் செயலகத்திற்கு நகரப் பேருந்து விடப்படுமா?

(ஆ) மடிப்பாக்கம் கூட்டு ரோட்டுடன் திரும்பும் பேருந்துகள் மடிப்பாக்கம் பேருந்து நிலையம் வந்து திரும்புமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தலைமைச் செயலகத்திற்கு கடற்கரைச்சாலை வழியாக பேருந்து இயக்குவது பற்றிய குறிப்பு பரிசீலனையில் இல்லை. எனினும் தற்போது மடிப்பாக்கத்திலிருந்து அண்ணா சதுக்கத்திற்கு காலையிலும், அவ்வாறே தலைமைச் செயலகத்திலிருந்து மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு மாலையிலும் ஒரு பயணத் தடம் எண் 45ஏ—இல் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இயலாது. சைதாப்பேட்டையிலிருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படுகிற தடம் எண் 51 எஸ்—இல் சில பயணத் தடவைகள் சைதாப்பேட்டையிலிருந்தும், செயின்ட் தாமஸ் மவுண்டிலிருந்தும் மடிப்பாக்கம் கூட்டுசாலைக்கு இடைப்பட்ட பயணிகள் கஷ்டத்தைச் சமாளிப்பதற்காக இயக்கப்படுகிறது. இது நீடிக்கப் பட்டால் தற்போது பெருமளவில் பயன்படுத்தும் தினசரி செல்லும் பயணிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதால் இந்தக் கோரிக்கையை ஏற்க இயலவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தெரு விளக்குகள் பராமரிப்பு.

*1709 திரு. வீ. தமிழ்மணி, திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தெரு விளக்குகளை மின்சார வாரியமே பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) அதற்காக மின் இலாக்காவிற்கு மான்யம் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.